10.12.2024

அ.வ.எண். 1071-2017 மற்றும் 8-2021 மற்றும் 160/2021

பி.வாசா.1 - சக்திகுமார் (எ) விஜயராகவன்

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் 2009 ல் B.COM படித்து முடித்துள்ளேன். மேற்படி 1071-2017 வழக்கின் முதலில் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண் எனக்கு தெரியாது. அது எந்த நீதிமன்றத்தில் முதலில் தாக்கல் செய்யப்பட்டு நடைபெற்றது என்று எனக்கு தெரியாது. அந்த வழக்கில் வாதிகள் யார் யார், பிரதிவாதிகள் யார் யார் என்று எனக்கு தெரியும். அந்த வழக்கு பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரை பற்றி எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி சரஸ்வதி எனது பெரியம்மா, 1ம் பிரதிவாதி எனது அம்மாவின் அம்மா. 3ம் பிரதிவாதி சுந்தராம்பாள் எனது பெரியம்மா, 4ம் பிரதிவாதி தெய்வாத்தாள் எனது அம்மா, 5ம் பிரதிவாதி சண்முகம் எனது தாய்மாமா. தனபால் என்பவர் சுந்தாரம்பாளின் மகன். அந்த வழக்கில் வாதிகள் என்ன பரிகாரம் கேட்டுள்ளனர் என்று எனக்கு தெரியாது. மேற்படி 1 முதல் 5 பிரதிவாதிகள் தற்போது உயிருடன் தான் உள்ளனர். என்னுடைய அம்மாவின் அம்மா தவிர மற்றவர்கள் நல்ல நிலையில் அவரவர் பணிகளை செய்து வருகிறார்கள் என்றால் ஆமாம். இந்த சாட்சியம் அளிப்பதற்கு முன்பு நான் மேற்படி 1 முதல் 5 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரையை நான் படித்து பார்க்கவில்லை. அந்த எதிர் வழக்குரை யாரால் தாக்கல் செய்யப்பட்டு யாரால் ஏற்றுகொள்ளப்பட்டது என்று எனக்கு தெரியாது. நான் என்னுடைய சாட்சிய வாக்குமூலத்தில் அசல் வழக்குழு எண்.1071/2017 வழக்கிற்கும் சாட்சியம் அளிப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் இல்லை, என்னுடைய 8/2021 மற்றும் 160/2021 வழக்கிற்கு தான் எனக்கு சங்கதிகள் தெரியும் என்றும் 1071/2017 வழக்கு பொறுத்து எனக்கு எந்த சங்கதியும் தெரியாது என்றும் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன்.

இந்த 1071/2017 வழக்கில் தான் மூன்று வழக்குக்கும் சேர்த்து சாட்சியம் பதிவாகி வருகிறது என்றால் ஆமாம். சுப்பாத்தாள் முதல் சண்முகம் வரை மற்ற நபர்களை பின்னிட்டு விசாரிக்க போவதாக அனுமதி பெறவில்லை என்றால் ஆமாம். நான் என் தாயார் தெய்வாத்தாளிடம் இருந்து பிரிந்து 2017 ல் இருந்து தனியாக வசித்து வருகிறேன். எனக்கு மேற்படி 1071/2017 ல் உள்ள 5 பிரதிவாதிகளுடன் நல்ல சுமூக உறவு

உள்ளதா என்றால் எனது மாமா சண்முகத்துடன் 2012 ல் இருந்து பிரச்சனை, 3ம் பிரதிவாதி சுந்தாரம்பாள் மகனுடன் 2006 ல் இருந்து பிரச்சனை உள்ளது மற்ற நபர்களுடன் நல்ல சுமூக உறவுமுறை உள்ளது.

எனக்கு பிரச்சனை உள்ள பிரதிவாதிகளை தவிர மற்றவர்களுடன் இந்த வழக்கு பற்றிய விவரங்களை நான் பகிர்ந்து கொள்கிறேன். மேற்படி 1, 2 மற்றும் 4ம் பிரதிவாதியிடம் அவர்கள் தாக்கல் செய்த எதிர் வழக்குரைக்கு சாட்சியம் அளிக்க இந்நீதிமன்றத்திற்கு வரச்சொல்லி நான் கேட்டேனா என்றால் இல்லை. பெண்கள் சொத்து பொறுத்து அவர் உயிருடன் உள்ளவரை அவரது மகனுக்கோ, கணவருக்கோ போகாது என்ற விவரம் எனக்கு தெரியும். மேற்படி 1071/2017 வழக்கில் உள்ள எதிர் வழக்குரையில் உள்ள சங்கதிகள் பற்றி எனக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில் அந்த சங்கதிகள் பொறுத்து என்னுடைய முதன்மை சாட்சிய வாக்குமூலத்தில் சொல்லி இருந்தால் அது தவறு என்றால் சரியல்ல. 1071/2017 வழக்கில் எதிர் வழக்குரையில் என் தாயார் மற்றும் மற்ற நபர்கள் தாக்கல் செய்த எதிர் வழக்குரை என்னை கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல.

1071/2017 வழக்கில் உள்ள பிரதிவாதிகளை சாட்சியாக விசாரிக்க வேண்டி வழக்கறிஞரிடம் கேட்டேனா என்றால் என்னுடைய சாட்சியம் முடிந்த பின்னிட்டு அவர்களை விசாரிக்கலாம் என்று வழக்கறிஞர் சொன்னார். நான் இந்த 1 முதல் 5 பிரதிவாதிகளுக்காகவும் சாட்சியம் அளிப்பதாகவும் என்னுடைய முதன்மை சாட்சிய வாக்குமூலத்தில் சொல்லி இருந்தால் அது தவறு என்றால் சரியல்ல. 1071/2017 வழக்கில் பிரதிவாதிகள் உண்மையாக நடந்த அவர்கள் அறிவுக்கு எட்டிய உண்மை சங்கதிகளை சொல்லி எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளனர் என்றும் அதை மறைத்து மறுத்து கூறவே நான் அவர்களை வழக்கில் சாட்சியம் அளிக்க விடாமல் உண்மையை தெரிந்துவிடும் என்பதற்காக தடுக்கிறேன் என்றால் சரியல்ல. 1071/2017 வழக்கில் என் தாயர் மற்றும் மற்ற பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் அவர்களது சொத்து 1914 பத்திரத்தின் கீழ் பாத்தியப்பட்டதாக சொல்லி எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம்.

அவர்கள் எதிர் வழக்குரையில் 1934 மற்றும் 1936 வருட ஆவணங்களின் கீழ் உரிமை கோருகிறார்கள் என்றால் ஆமாம். நான் தனியாக வழக்கு சொத்து எனக்கு

பாத்தியப்பட்டது என்று பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் அசல் வழக்கு எண்.39/2023 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கில் என் தாயார் மற்றும் மற்ற இவ்வழக்கு பிரதிவாதிகளை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் ஆமாம். மேற்படி வழக்கில் என் தாயாரை சேர்க்காமல் தாக்கல் செய்துள்ளது செல்லாது என்றால் சரியல்ல. என் குடும்ப உறுப்பினர்கள் பற்றி மூதாதையர்கள் பற்றி என் தாயார் தான் சாட்சியம் அளிக்க சரியான நபர் என்றும் என்னுடைய சாட்சியம் அது பொறுத்து ஏற்றுகொள்ளகூடாது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கை 1 முதல் 5 பிரதிவாதிகளின் மீது கடந்த 10.12.2013 ல் கருமத்தம்பட்டி காவல் நிலையத்தில் குற்ற எண்.755/2013 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அது வா.சா.ஆ.32 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

என்னிடம் காட்டடப்படும் ஆவணம் தான் கோயம்புத்தூர் மாவட்ட நீதிமன்றததில் பொது தகவல் அலுவலர் நான் தாக்கல் செய்த 379/2016 வழக்கு என்ன ஆனது பற்றி கொடுத்த தகவல் என்றால் அசல் வழக்கு 379/2016 கோவை மாவட்ட முதன்மை சார்பு நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்தது தான் ஆனால் இதில் எழுதப்பட்ட சங்கதிகள் பொறுத்து எனக்கு தெரியாது. நான் எனக்கு உரிமை கோரும் பிரச்சனைக்குரிய உயில் ஆவணத்தை அந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று பொது தகவல் அலுவலர் பதில் அளித்துள்ளார் என்றால் அது தவறு. மேற்படி உயில் ஆவணம் அசல் வழக்கு 379/2016 நான் தாக்கல் செய்யவில்லை என்று வாதி தரப்பில் மனுத்தாக்கல் செய்து நகல் பெற்று நீதிமன்றத்தில் அல்லது வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது.

மேற்படி வா.சா.ஆ.32 புகாரில் 1071/2017 வழக்கில் உள்ள தாவா சொத்து தனக்கு 273/2012 தீர்ப்பின் படி உரிமை என்றும் அந்த சொத்தை மோசடியாக பாகப்பிரிவினை பத்திரம் அவருக்கு தெரியாமல் 2012 ல் ஏற்படுத்தியதாக புகார் கொடுத்துள்ளார் என்றால் அவ்வாறு தான் புகார் கொடுத்துள்ளார் அது பொய்யான புகார். மேற்படி புகார் சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் படி தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. என் தாயாரும் மற்ற பிரதிவாதிகளும் கோவை முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் முன் ஜாமீன் தாக்கல் செய்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த முன் ஜாமீன் மனுவில் 1 முதல் 5 பிரதிவாதிகள்

என்ன விவரங்கள் சொல்லி உள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. மேற்படி புகார் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு மற்றும் முன் ஜாமீன் மனுவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள விவரங்கள் பற்றி 1 முதல் 5 பிரதிவாதிகளை விசாரணை செய்தால் தான் தெரியும்.

வாதிகள் விளம்புகை பரிகாரமாக 1071/2017 வழக்கில் 04.01.2012 தேதிய பாகப்பிரிவினை பத்திரத்தை செல்லாது என்று கேட்டு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால் ஆமாம். அந்த பாகப்பிரிவினையில் என்னுடைய தாயார் மற்றும் என்னுடைய அம்மாவின் அம்மா 947/1936 ஆவணத்தின் கீழ் மேற்படி சொத்து பாத்தியம் என்று காட்டியுள்ளார்கள் என்றால் ஆமாம். ஏற்கனவே ஒரு சொத்தை விற்பனை செய்யப்பட்டு விட்டால் அதை விற்பனை செய்தவர் பின்னிட்டு அந்த சொத்தை வேறு நபருக்கு விற்பனை செய்ய உரிமை இல்லை என்றால் ஆமாம். நான் 1071/2017 வழக்கில் உள்ள பிரதிவாதிகளுடன் நல்ல சுமூகமாக தான் தற்போது வரை இருக்கிறேன் என்றும் இந்த வழக்கிற்காக அதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.8/2021, மற்றும் 160/2021 ஆகிய வழக்கின் நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் உள்ள சங்கதிகள் தவறானது என்பது தெரிந்துவிடும் என்பதால் நான் எனது அசல் வழக்கு எண்.1071/2017 வழக்கில் உள்ள பிரதிவாதிகளை விசாரிக்காமல் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

உயர்நீதிமன்றத்தில் நாங்கள் பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்தியது மோசடியானது என்பதை அறிந்து தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய உத்தரவிட்டது என்றும் அதற்கு பிரதிவாதிகள் தாக்கல் செய்த முன் ஜாமீன் மனுவும் மோசடியான பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்தியது தெரிந்து தான் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

மேலும் குறுக்குவிசாரணைக்கு வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/சக்திகுமார் (எ) விஜயராகவன்

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga
District Munsif,
Sulur

Initial Judge
District Munsif, Sulur.

O.S.No.
Dt: